**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 376/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 17.11.2025.**

| | |
|---|---|
| **Name : அர்ஜூனன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 2, 3 present. ) (Accused 1, 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பள்ளக்காட்டில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 மணிகண்டன் என் நண்பர் ஆவார். கடந்த 2023 ம் வருடம் மாலை 4 மணி சுமாருக்கு நான் பாத்ரூம் பக்கத்தில் நின்று கொண்டிருந்த போது சத்தம் கேட்டது. நான் வெளியே வந்தேன். அப்போது ஆஜரில் உள்ள எதிரிகளும் மற்று இரண்டு நபர்களும் அ.சா.1 உடன் வாய் தகராறு செய்து கொண்டிருந்தனர்.

2) அ.சா.1 தகராறை விலக்க சென்ற போது பார்த்தால் அடையாளம் சொல்ல கூடிய நபர் உடைந்த கண்ணாடி துண்டுகளால் மணிகண்டனின் அப்பாவின் நெஞ்சில் குத்தினார். அவருக்கு ரத்தம் வந்தது. அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எதிரிகள் இருவரையும் அருகிலிருந்தவர்கள் காவல் நிலையம் அழைத்து சென்றனர். நீதிமன்றத்தில் காட்டப்படும் கண்ணாடி துண்டால் தான் எதிரிகள் அ.சா.1 ன் அப்பாவை உடம்பில் குத்தினார்கள்.

3) எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. ஆஜர் எதிரிகள் தான் அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) சம்பவம் நடக்கும் போது நான் பாத்ரூமுக்குள் இருந்தேன். சம்பத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் ஆமாம். என்ன காரணத்திற்காக சண்டை நடந்தது என்பதும் எனக்கு தெரியாது. நான் வெளியே வந்து பார்த்த போது கும்பலாக கூட்டமாக இருந்தது என்றால் ஆமாம். சம்பவத்தில் யார் யாரை என்ன காரணத்திற்காக அடித்தார்கள் என்று அந்த சமயம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.18 10:37:23 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 376/2024**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 17.11.2025.**

| | |
|---|---|
| **Name : கோபி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 2, 3 present. ) (Accused 1, 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து லாரி ஓட்டுநராக வேலை செய்கிறேன். 4 மணி சுமாருக்கு நான் வீட்டுக்கு அருகில் உள்ள பொது கழிப்பறைக்கு அருகில் வந்த போது மூன்று நபர்களும், இரண்டு இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள். மூன்று பேரும் அ.சா.1 யை கெட்ட வார்த்தையால் திட்டிக் கொண்டிருந்தார்கள். அ.சா.1 ன் அப்பா சம்பவயிடம் வந்து சண்டையை தடுக்க வந்த போது எதிரி வீரமணி என்பவர் அவர் பாக்கெட்டில் வைத்திருந்த கண்ணாடி துண்டால் அ.சா.1 ன் அப்பாவின் நெஞ்சில் இருந்து வயிறு வரை இடது பக்கமாக குத்தி கிழித்து காயம் ஏற்படுத்தினார்.

2) நீதிமன்றத்தில் காட்டப்படும் கண்ணாடி துண்டால் தான் எதிரி வீரமணி அ.சா.1 ன் அப்பாவின் வயிற்றில் குத்தினார். அதன் பிறகு காயம் பட்ட அ.சா.1 ன் அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அன்று இரவு 9 மணியளவில் சண்டை நடந்த இடத்திற்கு வந்த போலீசார் சண்டை நடந்த இடத்தை படம் வரைந்து அருகிலிருந்த கோவில் மற்றும் பொது கழிவறையை குறித்து கொண்டு என்னிடமும் மற்றொரு நபரான அர்ஜூனன் என்பவரிடமும் சாட்சியாக கையொப்பம் பெற்றனர். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜர் **அ.சா.ஆ-4** ஆகும். மற்றொரு கையெழுத்து எதிரிகள் சம்பவயிடத்திற்கு

இருசக்கர வாகனத்தில் வந்து பிரச்சனை செய்ததால் இரண்டு பைக் கீ மற்றும் கண்ணாடி துண்டுகளையும் கைப்பற்றி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். மகஜரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து **அ.சா.ஆ–5** ஆகும். ஆஜர் எதிரிகள் மற்றும் மற்றும் ஒரு நபரும் தான் சம்பவத்தில் ஈடுபட்டதாக சாட்சி சொன்னார். ஆஜர் இரு எதிரிகளும் அ.சா.1 மணிகண்டனை கையால் கட்டையால் அடித்தார்கள். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) நான் ஜலகண்டாபுரம் போலீஸ் கோர்டஸ் அருகே குடியிருந்து வருகிறேன் என்றால் ஆமாம். என் வீட்டிலிருந்து பார்த்தால் சம்பவயிடம் தெரியாது என்றால் ஆமாம். என் வீட்டில் கழிப்பறை உள்ளதா என்றால் இல்லை. என் வீட்டிற்கும் சம்பவயிடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 200 மீட்டராகும். நான் போலீசார் விசாரிக்கும் போது 3 பேர் அடித்ததாக தான் சொன்னேன் என்றால் ஆமாம். என் வாக்குமூலத்தில் 4 பேர் என்று கூறியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம்.

5) மணிகண்டன் ஒரு பெண்ணை விரும்பியதாகவும் அ தனை வீரமணி தடுத்து கேட்டதால் அந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக எதிரியை வேலை செய்யும் இடத்தில் அவர் உரிமையாளரிடம் சொல்லி வேலையை விட்டு நீக்கிவிட்டார் என்றால் ஆமாம். சம்பவம் நடந்த போது நான் கழிப்பறைக்குள் இருந்தேன் என்றால் ஆமாம்.

6) சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம். நான் சம்பவத்தில் ஈடுபட்டேனா என்றால் இல்லை. சம்பவம் எப்படி நடந்தது, யார் யாரை குத்தினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy
Digitally signed by D.Myilswamy
Date: 2025.11.18 10:37:29 +0530

Judicial Magistrate No.II,
Mettur.